1982 மார்ச் 3]

வரட்டாறு மற்றும் அடவிநயினார் கோயில் அணைத்திட்டங்கள்.

* வினா எண். 334—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதியில் கடையநல்லூர் ஊராட்சியைச் சார்ந்த பகுதியில் வரட்டாறு அணைத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா ?

(ஆ) மேக்கரை பகுதியில் ஆய்வு முடிந்துள்ள அடவிநயினார் கோவில் அணைத் திட்டப்பணி எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம். வரட்டாறு நீர்த் தேக்கத்திட்டம் மறுபரிசீலனைக்காக தலைமைப் பொறியாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே, வரட்டாறு திட்டத்தை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேக்கரைப் பகுதியில் இருக்கின்ற அடவிநயினார் கோயில் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் ? அதனால் முன் பகுதிக்காரர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் அந்தத்திட்டம் நிறைவேற்றித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் தென்காசி வட்டத்தில் வரட்டாற்றின் குறுக்கே அணைகட்ட 1975-76-ஆம் ஆண்டிலே உள்ள விலைவாசிகளின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு 77 இலட்ச ரூபாய் செலவாகும் என்று ஒரு கருத்துரு வந்தது. ஆனால் அப்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அது கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி அது அப்போது கைவிடப்பட்டது. ஆனால் பின்தங்கிய பகுதிகளில் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கக்கூடாது என்று இந்த அரசு எடுத்த முடிவுக்கு இணங்க திரும்பவும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது முதல் பகுதிக்கான விடை.

இரண்டாவது பகுதிக்கான விடை : அடவிநயினார் கோயில் அணைத்திட்டம். இது செங்கோட்டை வட்டம் மேக்கரை கிராமத்தில் அனுமான் நதியின் குறுக்கே அமைக்கப்படுகிற நீர்த் தேக்கம். இது ஏற்கெனவே பயன்பெறுகின்ற 2,139·08 ஏக்கர் இருபோக நிலங்களுக்கு பாசன வசதியை உறுதி செய்யும்.

மேலும், 237·87 ஏக்கர் இருபோக நிலங்களுக்குள்ள பாசனப் பற்றாக்குறையைப் போக்க வாய்ப்பு ஏற்படுத்தும். மேலும், 250 ஏக்கர் நிலங்களுக்கு—புதிய புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும். இதனுடைய மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 887·40 இலட்சமாகும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளி விவரங்கள் திருப்தியாகத் தந்து இருக்கிறார்கள். அந்த மேக்கரை கிராமத்தில் அமைக்கப்படும் அடவிநயினார் கோயில் அணைத் திட்டத்தின் காரணமாக முன் பாசனதாரர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா ? அப்படி பாதிப்பு ஏற்படாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மேல் பகுதியில் தற்போது பாசனத்தில் உள்ள 2,139·08 ஏக்கர் நிலங்களுக்கு இருபோக சாகுபடிக்கு நீர் உறுதி செய்யப்பட்ட பின்னர் தான் மற்ற பகுதிகளுக்குத் தரப்படும். ஆகவே நிச்சயமாக பாதிப்பு இருக்காது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வேளாண்மை அபிவிருத்திக்கு மூல தேவை, முக்கிய தேவை நீர்ப்பாசனம்தான். அந்த நீர்ப்பாசனத்திற்கான திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில் கட்டுப்படியாகாத திட்டம் என்று சொல்லி பல திட்டங்கள் கைவிடப்பட்டு இருக்கின்றன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட தெரிவித்திருக்கிறார்கள். இப்படி கட்டுப்படியாகாத திட்டம் என்று சொன்னதால், பல திட்டங்களை அவசியமானவைகளாக இருந்தும் நிறைவேற்றாமல் விட்டு விட்டார்கள். அதனால் பல அபிவிருத்தி வேலைகள் நின்றுவிட்டன ஆகவே, இப்படி கட்டுப்படியாகாத திட்டங்கள் என்று சொல்லி நல்ல திட்டங்களைக் கைவிடாமல், எங்கெங்கே நீரைத் தேக்கி வைக்க வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்த்தேக்கம் அமைத்துத் தர, அதிகமான நிதி ஆதாரங்களை அமைச்சர் அவர்கள் பெற்று, அதைச் செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுகிறபோதே சொன்னேன். 1975-76-ஆம் ஆண்டிலேயே இது பொருளாதார ரீதியாக கட்டுப்படியாகாத திட்டம் என்று கைவிட்டு விட்டார்கள். ஆனால் இன்றைய அரசு ஒரு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் இத்தகைய திட்டம் நிறைவேற்றப்பட வாய்ப்பு இருந்தால், பொருளாதார ரீதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அந்தத் திட்டங்களை முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நிறைவேற்றி வருகிறோம். அதுபோல் கிட்டத்தட்ட ?

திட்டங்கள் நெல்லை மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கைவிடப்பட்டு இருக்கின்றவைகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மேக்கரை அனுமான் நதியிலே கட்டப்படுகின்ற அணையால் தென்காசி வட்டத்தில் உள்ள கீழ்ப்பகுதியில் உள்ளவர்கள் பாதிக்கப்படக்கூடும் என்று தெரிவித்து மனுக்கள் ஏதேனும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி வந்திருக்குமானால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதன் மூலம் பயன்படக்கூடிய எந்த ஒரு விவசாய நிலமும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் இந்தத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இதிலே முதலிலே 2139·08 ஏக்கர் இருபோக நிலங்களுக்குத் தேவையான நீர் உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் மீதியுள்ள நிலங்களுக்குக் கொடுக்கிறோம். எனவே யாருக்கும் பாதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளியங்குடி நரிக்குடி கிராமத்திற்கான பாசன வாய்க்கால்.

*வினா எண். 335—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமத்திற்கான நீர்ப்பாசன வாய்க்கால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இடித்து தூர்க்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) இந்த வடிகாலை சீரமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83-ஆம் ஆண்டுக்கான காவிரி வளர்ச்சி திட்டப் பணிகளில் ஒன்றாக இது சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் துவக்கப்படும். என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS